செ.வெ.எண்: 19

## செய்திக் குறிப்பு

நாள். 6.7.2017

# இராணுவத்தில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு மானியம்

இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு, இராணுவப பயிற்சிக் காலத்தின்போது, பயிற்சி செலவினத்தை எதிர்கொள்ள, தொகுப்பு நிதியிலிருந்து தொகுப்பு மானியம் (LUMPSUM GRANT) கீழ்கண்ட வகையில், முன்னாள் படைவீரர் நலத் துறையால் 2015-2016 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 01 | முப்படையில் நிரந்தர படைத் துறை அலுவலர் (Permanent Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு. பயிற்சியில் (NDA / IMA / Naval / Air Force Academy) சேர்ந்து பயிற்சி பெற்று வரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு | ரூ. 1,00,000/- |
| 02 | முப்படையில் குறுகிய கால படைத் துறை அலுவலர் (Short Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சியில் சேர்ந்து பெற்று வரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு | ரூ. 50,000/- |
| 03 | இராணுவத்தில் இளநிலை படை அலுவலர்கள் மற்றும் இதர பதவிகளின் (Junior Commissioned Officers and Other Ranks) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சியில் சேர்ந்து பயிற்சி பெற்று வரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு | ரூ. 25,000/- |

எனவே, தங்களது மகன்களை இராணுவப் பணிக்கு அனுப்பிய, தகுதியுடைய முன்னாள் படைவீரர்கள், திருநெல்வேலி மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் உரிய படிவம் பெற்று விண்ணப்பித்து, பயனடையுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி

வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி

30/6/2017

30/6/17